பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 20 வியாழக்கிழமை 05.09.2024 கதிர் 302

# அனுரகுமார ஆட்சிக்கு வந்தால் கோட்டாவின் யுகமே ஏற்படும்

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் ஆவேசம்

அனுர ஆட்சிக்கு வந்தால் கோட்டாவின் யுகமே ஏற்படும்; ரணிலிடம் தஞ்சம் கோரிய ஊழல் பேர்வழிகளை தண்டிக்க தயாராகவுள்ளோம் என்று தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் தலைவர் ரிஷாத் பதியுதீன்.

சஜித்பிரேமதாசவை ஆரித்து புத்தளத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொடுங்கோலன் கோட்டாவின் சகாக்களைத் தண்டிக்க இத்தேர்தலை பயன்படுத்தவேண்டும். ஒரு இனத்தின் சார்பாகவே, ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதாக இறுமாப்புப்பேசிய கோட்டாபயராஜபக்சவின் சகாக்களைத் தோற்கடிக்க இத்தேர்தலைப் பயன்படுத்துங்கள்.

அன்புக்குரியதாய்மார்களே,இளைஞர்களே, தந்தையர்களே மத குருமார்களே! சகல சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்த மாவட்டம் புத்தளம். எம்மிடையே வேறுபாடுகளைத் தோற்றுவிக்க ஒரு கொடுங்கோலன் ஆட்சிபீடம் ஏறினான். நாட்டின் பொருளாதாரத்தை படுகுழியில் தள்ளிய அவரை மக்கள் விரட்டியடித்தனர். இவரது சகாக்களோ ரணிலின் மடியில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

சாராயக் கடைக்கான அனுமதியைக் கைநீட்டியவர்களின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையாகிவிட்டது. பாவம் அவர்கள் ஒரு மனிதன் அரசியலுக்கு வந்ததற்கு இதுமாதிரியான 'லைசன்ஸ்' சுகளாலதான் ஐஞ்சாறு ☞ 2

## தபால்மூல வாக்களிப்பு மீதும் கண்காணிப்பு

தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை முன்னிட்டு 900க்கு மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ஃபெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கூறினார்.

நாட்டின் 22 தேர்தல் தொகுதிகளிலும் கண்காணிப்புபணிகள்முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தபால்மூலவாக்களிப்பை கண்காணிக்க நடமாடும் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

## என்னைச் சிறிறையில் அடைப்பதற்குச் சதி

### முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

குற்றச் செயலுக்காக தண்டனை பெற்றுள்ள கைத ஒருவருக்கும் எனக்கும் தொடர்புஇருக்கின்றதுஎன்றுதெரிவிப்பதன் மூலம் என்னைச் சிறைல் அடைக்கச் சதி நடக்கியது என்று எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து ☞ 2



## சர்வதேச நாணய நிதியத்தினது நிபந்தனைகளால் பாதிப்பில்லை

### இப்படிச் சொல்கிறார் அனுரகுமார

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் இலங்கைக்கு பாதகமானவையில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற வர்த்தக சமூகத்தின் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டுள்ள அவர் சர்வதேசநாணயநிதியதுடனான உடன்படிக்கையை தனது ஆளும் தரப்புபின்பற்றும்எனதெரிவித்துள்ளார். இலங்கையின் ☞ 8

## புதிய அம்சங்களுடன் கடவுச்சீட்டு செப். 15இல்

செப்டெம்பர் 15 புதிய பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியகடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

50,000,00புதியகடவுச் சீட்டுகளைக் கொள்வனவு செய்யநடவடிக்கைஎடுக்கப் பட்டுள்ளது. செப்டெம்பர் 15 அன்று முதல் தொகுதியாக 50,000 கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு - குடியகல்வு திணைக்களம்கூறியுள்ளது.

அவை கிடைத்தவுடன் தற்போது கடவுச்சீட்டு விநியோகத்தில்ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு கிட்டுமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதுவரை நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளை 1000 ஆக மட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

தற்போது தம்வசம் 30,000 கடவுச்சீட்டுகள் கையிருப்பில் உள்ளதாக குடிவரவு - ☞ 8

## கஜேந்திரகுமாருக்கு 3 மாத விடுமுறை

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற அமர்வுகளில் மேலும் 3 மாதங்களுக்கு பங்கேற்காதிருக்க சபை அனுமதி வழங்கியது.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பு, வாய்மூல விடைக்கான வினாக்களைத் தொடர்ந்து,

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ☞ 8

### சுமந்திரன், சாணக்கியன் தவிர்ந்த

## ஏனைய தமிழ் எம்.பிக்கள் ரணிலுக்கே ஆதரவளிப்பு

### விதானகே எம்.பி. நாடாளுமன்றில் அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சாணக்கியன் தவிர்ந்த ஏனைய தமிழ் நாடா-ளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்குகின்றார்கள். அவர்களின் பெயர் விவரங்களை வெளியிட விரும்பவில்லை என்று ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ☞ 2

## ரணில் மீது நம்பிக்கை வைத்து சரியான தீர்மானத்தை எடுங்கள்

### நிதி இராஜாங்க அமைச்சர் மக்களுக்கு அழைப்பு

வீழ்ச்சியடைந்திருந்த இந்த நாட்டை கட்டியெழுப்பிய நபரான ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்து, ஜனாதிபதி தேர்தலில் சரியான தீர்மானம் எடுக்கும்படி மக்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்தார்.

நாடாளுமன் றத்தில் நேற்று ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழ் அரசுக் கட்சியில் பயணம்

### அரியநேந்திரன் நேற்று அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நான் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன். அதில் மாற்றுக் கருத்தில்லை. கட்சியால் என்னிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பம் வரும் போது அதற்கான விளக்கத்தினை வழங்குவேன் -என்று தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

நமக்காக நாம் என்ற தேர்தல்பிரச்சாரப்பணிக்காக நேற்று வவுனியாவிற்கு விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்குக் ☞ 8

## யாருக்கும் ஆதரவில்லை நடுநிலையே வகிக்கிறேன்

### சந்திரிக்கா அம்மையார் அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்காமல் நடுநிலை வகிக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ☞ 8

### இராணுவத்தோடு சேர்ந்து காட்டிக்கொடுத்தோர்

## தமிழ் பொது வேட்பாளரின் பின்னால் நின்று தமிழரை இன்றும் காட்டிக் கொடுக்கிறார்கள்

### நாடாளுமன்றில் சாணக்கியன் விளாசல்

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது இராணுவத்துடன் இணைந்து விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் மீண்டுமொருமுறை பொதுவேட்பாளருக்குப் பின்னால் இருந்துகொண்டு எமது தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர். இதுவே உண்மை என்று இலங்கை தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான இரு ஒழுங்குவிதிகள், கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள், சட்டத்தின் கீழான இரு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கோடிகளைப் பார்க்க முடியும் என்றாலும் அதையும் நிம்மதியா செய்ய விடுகிறார்கள் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காக வைச்சு சாராயக்கடை 'லைசன்ஸ்'கள் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியாளர்களால் வழங்கப்பட்டது என்பது நாடறிந்த உண்மை. குறிப்பாக, எதிர்த் தரப்பில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த 'லைசன்ஸ்' குடுபட்டிருக்கிறது. இதன் மூலம் கோடிக்கணக்கில் வருமானம் என்றதும் அவசரப்பட்டுக் கைநீட்டிவிட்ட எங்கள் அரசியல்வாதிகள் சிலர் இப்ப என்ன செய்வதென்று தெரியாமல் முழுசிக் கொண்டிருக்கினமாம்.

அதுவும் தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாசவைஆதரிக்கிறதுஎன்றுமுடிவெடுத்த பிறகு, எதற்கெதிரான நிலைப்பாடெடுத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில கைநீட்டி சாராயக் கடை 'லைசன்ஸ்' வாங்கின ஆக்கள் அந்த இந்தச்சாட்டுக்களைச்சொல்லிசஜித்துக்கு வாக்குகள்போகாமல்பாக்கிறம்என்றகதையை எல்லாம் விட்டிட்டு, உடனடியா தனக்கு ஆதரவா அந்த வாக்குகளை எல்லாம் திருப்பச் சொல்லி அவசர உத்தரவுகள் பறந்திருக்காம். இல்லையெண்டால்சாராயக்கடை'லைசன்ஸ்' வாங்கின கதையை வெளியில விடுவம் என்று மிரட்டி இருக்கினமாம்.

அதிலையும் குறிப்பா கிளிநொச்சியில இரண்டு 'லைசன்ஸ்' முல்லைத்தீவில இரண்டு 'லைசன்ஸ்' குடுபட்ட ஆக்களுக்கு நேரடியாகவேமிரட்டல்விடுக்கப்பட்டிருக்காம். 'லைசன்ஸ'வாங்கிப்போட்டுதேர்தல்நேரத்தில செய்யிறதா சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றேல்ல அதனால சாராயக்கடை விவகாரத்தை வெளியில விடப் போகிறம் என்றுஒரே மிரட்டலாம். வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில 'லைசன்ஸ்' வாங்கின ஆக்களுக்கு, உந்த 'பம்மாத்து வேட்பாளர்' கதையை எல்லாம் விட்டுட்டு உடனடியாக ரணிலுக்கு ஆதரவு என்று அறிவிக்கவேணும் இல்லையெண்டால் சாராய 'லைசன்ஸ்' உட்பட வாங்கின எல்லா விவரங்களையும்வெளியிலவிடுவம்என்றும் மிரட்டலாம்.

கைநீட்டின இடத்தில இந்த மாதிரிப் பிரச்சினைஎன்றால்,'சாராயக்கடைலைசன்ஸ்' பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்கள்அனைத்தும்சஜித்பிரேமதாசவின் ஆட்சியில் வெளியிடப்படும் என்று திடீர் அறிவிப்புச் செய்திருக்கிறார் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன். அவருடைய கட்சியில் இருந்தும் 3 எம்.பிமார் ரணில் பக்கம் போயிட்டினம் என்கிற ஆத்திரம் அந்தாளுக்கு. அதனால, எல்லாத்தையும் அம்பலப்படுத்திதுகிலுரியிறதுஎன்றகோபத்தில இருக்கிறார் மனுசன்.

சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் 'சாராயக் கடை லைசன்ஸ்' வாங்கின ஆக்களின்ர விவரங்களை வெளியிடுறது மட்டுமில்லை, அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்படும் என்று மன்னாரில் சஜித் பிரேமதாசவையும் மேடையில் வைத்துக்கொண்டு அறிவித்திருக்கிறார் ரிஷாத் பதியுதீன்.

'மதுபான கோட்டாக்களை பெற்றுக்கொண்டோரின் விவரங்கள் சஜித்தின் ஆட்சியில் வெளியிடப்படும்; தக்க தண்டனை வழங்கவும் தயங்கோம்' என்று அவர் அறிவித்திருக்கிறார்.

அவனவன் கோடி கோடியாய் சுருட்டிக்கொண்டு போறாங்கள், அவங்களை எல்லாம் விட்டிட்டு ஒரு சில கோடிகளுக்கு ஆசைப்பட்ட எங்களுக்காடா இந்தக் கதி என்று புலம்புகிறார்களாம் 'சாராயக் கடை லைசன்ஸ்'வாங்ககைநீட்டினதேசியவாதிகள் எல்லாம். ஆனால், ரணில் தரப்போ "செய் அல்லது செத்துமடி" என்கிற அளவிற்குத் தீவிரமாக இருக்கிறதாம். தேர்தலுக்கு நாள் நெருங்க நெருங்க என்னவெல்லம் நடக்கப்போகிறதோ என்று நினைக்கவே குலைநடுங்குது.

இதற்கிடையில 'பம்மாத்து வேட்பாளர்' நிறுத்தப்பட்ட விவகாரத்தில தேவையில்லாமச் சிக்கிப்போட்டம்அதிலஇருந்துஎப்பிடிவெளியில வாறது என்று சஜித்துக்கு ஆதரவளிச்ச கட்சியின்ர 'சுதந்திரனமா' நாடாளுமன்ற உறுப்பினர்களிட்டை ஆலோசனைவேற கேட்கப்பட்டதாகவும் ஒரு தகவல்.

இப்பிடிச் சிக்கிச் சின்னாபின்னப்பட்டு நிக்கிறது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமில்லை. ஒரு கட்சியின் தலைவர் தரப்பும்தான் என்று கேள்வி. தலைவருக்குத் தெரியாமலேயே அவரின்ர மகன் கைநீட்டினதால வந்த பிரச்சினையாம் இது. புலம்பெயர் வர்த்தகர் ஒருத்தரின்ர ஏற்பாட்டில மலைநாட்டில இருக்கிற ஒரு நகரத்தில சஜித்தைச் சந்தித்த தலைவரின்ர மகனுக்கு 5000கே குடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. காச வாங்கீட்டு காத்தோட போயிருந்தாப் பறவாயில்லை, தங்கட கட்சியின்ர முழு ஆதரவையும் பெற்றுத் தருவம் என்று வாக்குறுதி வேறு குடுத்திட்டு வந்திருக்கினம். சூட்டோட சூடா கட்சியும் அவருக்கே ஆரவு என்று அறிவிச்சும்விட்டுது.

இந்த விவரம் எல்லாம் தெரியாத தலைவர் கட்சி எடுத்த முடிவைக் கேள்விக்குள்ளாக்கிற விதத்தில ஏதோ கருத்துச் சொல்லப்போக அதைப் பிடிச்சுக்கொண்ட ஜனாதிபதி ஊடகப் பிரிவு உடனடியாக அந்தக் கட்சி எடுத்த முடிவு கட்சி முடிவில்லை என்று தலைவரே சொல்லிட்டார் என்று எல்லா ஊடகங்கக்காரர்களுக்கும் செய்தியை அவசர அவசரமாகப் பரப்பியிருக்கினம். அந்தச் செய்தியும் பரபரப்பாக எல்லா இடங்கிளிலையும் வெளியாகின உடன, கோபப்பட்ட சஜித் தரப்பு எடுத்து, அப்ப மகன் காசு வாங்கின விவரங்களை எல்லாம் இப்பவே வெளியில விட்டு உங்களை அம்மணமா ஓடவைக்கவா என்று மிரட்ட, அதுக்குப் பிறகுதான் தலைவருக்குத் தன்ர மகன் தனக்குத் தெரியாமலேயே குறுக்குசால் ஓட்டுறார் என்ற விவரம் தெரியவந்திருக்கிறது. மறுநாள் காலங் காத்தாலேயே தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றி அவர் அறிக்கைவிட்டு "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்று ஒதுங்கிவிட்டாராம்.

இப்படி விவகாரம் பிரச்சினைக்குரியதாக மாறிப்போனதால அதைச் சமாளிக்க தலைவரின்ர மகனை சஜித்திட்டை கூட்டிக்கொண்டு போய் விலைபோக வைத்து அந்த புலம்பெயர் வியாபாரியே தாங்கள் சஜித்தோட நடத்தின பேச்சுக்களில காணப்பட்ட இணக்கத்தின்படிதான் கட்சி அவரை ஆதரிக்க முடிவெடுத்தது என்கிற அளவில தங்கட டிஜிட்டல் பத்திரிகையில செய்தி எல்லாம் போட்டிருக்கினம்.

இந்த லட்சணத்தில தமிழ்த் தேசியம் தடைகளைத் தாண்டி வென்றிட்டுத்தான் மறுவேலை பார்க்கும் என்டிறன் நான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## அனுரகுமார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சமடைந்துள்ளனர்.

உணர்ச்சிவசப்பட்டுதவறானவழிகளைத் தேர்ந்தெடுக்காதீர்கள். சீனா, வியட்நாம் நாடுகளில் நடப்பதை எண்ணிப்பாருங்கள். மதக்கடமைகளைச் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. கடந்த காலத்தில், ஒருசில இளைஞர்கள் உணர்ச்சிகளுக்கு அடிமையானதால், பயங்கரவாதிகளாக்கப்பட்டனர். ஈஸ்டர் தாக்குதலின் எதிரொலிகளை மறக்க முடியாது. எந்த அனுபவமுமில்லாத தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டினால், கோட்டாவின் யுகமே மீண்டும் ஏற்படும். இந்தக் கட்சியின் செயற்குழுவிலுள்ள 28 பேரும் ஒரே இனத்தைச் சேர்ந்தோர்களே. இவர்களது மேலாதிக்க மனோபாவத்தைப் புரிந்துகொள்ள இதுவே போதும்.

ஆனால், ரவூப்ஹக்கீம், மனோகணேசன், திகாம்பரம், ராதாகிருஷ்ணண், சுமந்திரன் உள்ளிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் மற்றும் எமது கட்சி எல்லாம் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றன.

கொழும்பிலுள்ளகுப்பைகளைமட்டுமல்ல, இந்த ஆட்சி நீடித்தால் சிங்கப்பூரிலுள்ள குப்பைகளையும் இங்கேதான் கொட்டுவர்.

தபால்மூல வாக்களிப்பு வெற்றியை முன்னறிவிப்புச் செய்யும். எனவே, எமது வெற்றிக்குவழிகாட்டபடித்தமக்கள்தாபால்மூல வாக்கைப் பயன்படுத்துங்கள் - என்றார்.

## ஏனைய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழான இரு ஒழுங்குவிதிகள், கொழும்பு துறைமுகநகரப்பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின்கீழானஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்திக்கருத்திட்டங்கள்சட்டத்தின்கீழான இரு கட்டளைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தின்உரையைதமிழ்மற்றும் சிங்கள மொழியில் கேட்டேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதை வார்த்தையால் சொல்லாவிடினும், அவரது மனதில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாடு இருப்பதை அவதானிக்க முடிகிறது" என்றார்.

எழுந்து பதிலளித்த சாணக்கியன், "எனது உரையை செவிமெடுத்தவர்களுக்கு அதன் அர்த்தம் விளங்கும் நீங்கள் மாறுப்பட்ட பொருட்கோடல் வழங்க வேண்டாம்" என்றார்.

தொடர்ந்துஉரையாற்றியமதுரவிதானகே, தமிழ்தேசியகூட்டமைப்பின்உறுப்பினர்களை நேற்றுக் காலை சந்தித்தேன். நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரை தவிர ஏனையோர் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கு ஆதரவுவழங்கும் நிலைப்பாட்டில் உள்ளார்கள். அவர்களின் பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை.

பலமான அரச தலைவரை தெரிவு செய்வதை தடுப்பதற்கு சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சிகள்முன்னெடுக்கப்படுகின்றன. அதற்காக பெருமளவிலான நிதி செலவழிக்கப்படுகிறது. ஆகவே மக்கள் அறிவு பூர்வமாக சிந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியகல்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த நாட்களில் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அலுவலகத்தை அண்மித்து கடவுச்சீட்டைபெறுவதற்காகநீண்டவரிசைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## என்னைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுகையிலேயேஇவ்வாறுதெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் முன்னாள்அமைச்சர்மனுஷநாணயக்காரவும் அஸ்லம் என்ற நபரும் வெலிகடை சிறைச்சாலைக்கு சென்று, 5 வருடங்களாக குற்றச் செயல் ஒன்றுக்காக சந்தேக நபராக இருக்கும்ஒருவரைசந்தித்துள்ளனர். இவ்வாறு குறித்த சந்தேக நபரிடம், அவரை பிணையில் வெளியில் எடுப்பதாகவும் இன்னும் பல்வேறு வரப்பிரசாதங்களை வழங்குவதாகவும் தெரிவித்து, எனக்கு எதிராக வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு கேட்டுள்ளார்கள்.

அதாவது சந்தேகத்தின் பேரில் 5 வருடங்கள் சிறையில் இருக்கும் குறித்த நபரின் குற்றச்செயலுக்கு, எனக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவித்தே இந்த வாக்குமூலத்தை அவர்கள் கேட்டுள்ளனர். மனுஷ நாணயக்கார குறித்த சந்தேக நபரை சந்தித்தமை தொடர்பில் என்னிடம் ஆதரம் இருக்கிறது.

சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காக கடந்த காலங்களில் நான் முன்னிலையில் இருந்துசெயற்பட்டுவருபவன்என்பதுயாரும் அறிந்த விடயம். இதனைத் தாங்கிக்கொள்ள முடியாமல், என்னை எப்படியாவது ஏதாவது ஒரு பிரச்சினைக்குள் சிக்கவைத்து, என்னை சிறையில் அடைப்பதற்கு அல்லது எனது உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு சதித்திட்டம் ஒன்று இடம்பெற்று வருகிறது என்பது எனக்கு புலனாகிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் போதுமான ஆதாரங்களை வைத்துக்கொண்டே இதனை தெரிவிக்கிறேன். இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்து, இந்த ஆதாரங்களை சமர்ப்பிக்க இருக்கிறேன்.

எனது உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு ரணில் விக்ரமசிங்க பொறுப்பு கூறவேண்டும் என்பதை நான் பகிரங்கமாக தெரிவிக்கிறேன். ரணில் விக்ரமசிங்க போன்ற ஒருவரை 15 வருடங்களாக இந்த நாட்டின் தலைவராக்க ஐக்கிய தேசிய கட்சிக்கு எமது வாழ்க்கையை அர்ப்பணித்து, பணியாற்றியமைக்காக நான் வெட்கப்படுகிறேன்.

தேர்தல் ஆரம்பிக்கும்போதே சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்எனநான்ஆரம்பித்திலேயே ஜனாதிபதிக்கு தெரிவித்தேன். ஆனால் தற்போது அவர் செய்ய முடியுமான அனைத்து மோசமான நடவடிக்கைகளையும் செய்து வருகிறார்.

அதேநேரம் மனுஷ நாணயக்கார பெரும் மோசடிக்காரர். அவர் செப். 21க்கு பின்னர் கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்படுவார். ஏனெனில், அரபு நாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண் தொழிலுக்கு செல்லும் பெண்கள் ஒவ்வொருவரிடம் இருந்தும் 75ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டுள்ளார்.

அதேபோன்று இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்கு 90ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டுள்ளார். கடந்த இரண்டு வருடங்களில் இவர் சம்பாதித்த அளவு ராஜபக்ஷ குடும்பமே சம்பாதிருக்காது என்றே நான் நினைக்கிறேன். கொழும்பில் அவருக்கு இருக்கும் கட்டடங்கள் காணி தொடர்பில் எங்களுக்கு தெரியும். அதனால் நான் சிறைக்கு செல்கிறேனோ இல்லையோ, இந்த நாட்டு அப்பாவி பெண்களிடம் மோசடியாக பணம் பெற்றுக்கொண்டமைக்காக அவர் சிறைக்கு செல்வார்.

கடந்த 30 வருடங்களாக நான் கொழும்பு மாவட்டத்தில் அரசியல் செய்து வருகிறேன். இதுவரை எனக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு இல்லை. எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்குஎந்தசந்தர்ப்பத்திலாவது நெருக்கடிகளை காஜடுத்திருக்கிறதா என்பதை அவர்களிடம் கேட்டுப்பார்க்கலாம். நாங்கள் அனைவருடனும் சிநேகபூர்வமான முறையிலேயே அரசியல் செய்கிறோம்.

எங்களுக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டும் இல்லை. நாங்கள் தூய்மையான அரசியலையே செய்து வருகிறோம். அமைச்சுப்பதவி வழங்குவதாக ஜனாதிபதி என்னையும் அழைத்தார். நான் அதற்கு இனங்கவில்லை. அவரின் தீர்மானம் பிழை. அதனால் அவரை அரசியல் ரீதியில் நான் பகிரங்கமாக விமர்சித்தேன்.

அது எனது அரசியல் உரிமை. இதனை தாங்கிக்கொள்ள முடியாமல் எனக்கு எதிராக செயற்பட்டு. என்னை சிறைப்படுத்த முற்படுவதாக இருந்தால், இவர்களின் அரசியல் நிலை என்ன? இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தவா ரணில் விக்ரமசிங்க அதிகாரத்தை கேட்கிறார்? இதுவா அவரின் கௌரவமான அரசியல்.

அதனால் எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் சதித்திட்டம் தொடர்பில் நீதி கிடைக்க வேண்டும். குற்றப்புலனாய்வுபிரிவுபொலிஸார் இது தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் என்வகையில் எனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சபாநாயகரை கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## ரணில் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகிய போது, நாட்டை பொறுப்பேற்று முன்னெடுத்து செல்ல முடியுமான யாராவது இருக்குமானால் முன்வருமாறு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தபோது, பிரதான எதிர்க்கட்சி அதன்போது நாட்டின் நிலைமை மோசமான நிலையில் இருப்பதை அறிந்துகொண்டு நாட்டை பொறுப்பேற்க பின்வாங்கியது. ரணில் விக்ரமசிங்க இந்த சவாலை ஏற்றுக்கொண்டு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்.

நாட்டின்பொருளாதாரத்தைக்கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபடுமாறு அழைப்பு விடுத்த சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சி சம்பிரதாய முறைப்படியே செயற்பட்டு வந்தது. சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வது மற்றும் வட்வரி அதிகரிப்பு தொடர்பிலும் அவர்கள் சமூகத்தில் பொய்யான பீதியை ஏற்படுத்தும் வகையிலேயே செயற்பட்டு வந்தனர்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நூற்றுக்கு 8.3 வீதத்துக்கு ஆளாகி இருந்த பொருளாதாரத்தை நூற்றுக்கு 12 வீதத்துக்கு கொண்டுவரஎங்களுக்குமுடியுமாகிஇருக்கிறது. செலவுகளைக் கட்டுப்படுத்த முடியுமான வகையில் பலமான நிதி முகாமைத்துவ சட்டத்தை ஆளும்தரப்பால் கொண்டுவர முடியுமாகி இருந்தது. கடன் செலுத்துதல் மற்றும் வட்டிக் கடன் தவிர கட்டுப்படுத்த முடியுமான அனைத்து செலவுகளையும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மொத்த உள்நாட்டுஉற்பத்தியில்நூற்றுக்கு13வீதத்தை தாண்டவில்லை.

நாடு பொருளாதார ரீதியில் கஷ்டமான காலப்பகுதியில் நாட்டை பொறுப்பேற்று, நாட்டை ஓரளவு ஸ்திர நிலைக்கு கொண்டுவர

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# பெண்ணின் உரிமை சமூகத்தில் பேசுபொருளாகிறது சட்டம் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்

(பாறுக் ஷிஹான்)

எமது சமுதாயத்தில் பெண்கள் மிக முக்கிய பங்காற்றி வருகிறார்கள். ஆகவே பெண்ணினது உரிமையும் மனித உரிமையே என்பதால் சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பங்கு பற்றி நாம் அக்கறை கொள்வதோடு, அவர்களின் முன்னேற்றத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. எனவே பெண்ணின் உரிமை சமூகத்தில் பேசுபொருளாகின்றது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

முஸ்லிம் ஆராய்ச்சி செயல் முன்னணியால் தமிழ், முஸ்லிம் யுவதிகளுக்கான பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வு செவ்வாய்க் கிழமை அம்பாறை மாவட்டம் மருத முனையிலுள்ள முன்னணியின் அலுவலகத்தில் அதன் இணைப்பாளர் யு.எல்.ஹபீலா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது -

உலக சனத்தொகை புள்ளிவிவ ரங்களின்படி, பெண்களின் எண்ணிக் கைநாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. எல்லாவிதங்களிலும் ஆண்களைப் போலவே அறிவாற்றல்மிக்கவர்களாக, சிறந்த நிர்வாகிகளாக, ஆராய்ச்சி யாளர்களாக, அரசியல்வாதிகளாக பெண்கள் இன்று தங்களை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

இன்றைய பொருளாதார நெருக்கடி காலத்தில் மணமுடித்த கணவன் அநாதரவாய் மனைவியை யும், பிள்ளைகளையும் விட்டுச் சென்றுள்ளதால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமல் வாழ்க்கைச் சுமைகளை சுமந்து கண்ணீர் விட்டழுகின்ற பெண்களின் நிலை பற்றியும் நாம் கவனஞ் செலுத்த வேண்டும்.

முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்திலும் பெண்களைப் பற்றிய மனப்பாங்குகள் சட்ட ஏற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துவதைக் காணலாம்.

இச்சட்டத்தின்படி, ஒரு பெண் பருவமடைந்ததும் திருமணம் செய்ய முடியும். ஆனால் 12 வயதுக்குக் குறைவாக இருப்பின் காழி நீதிபதியின் அனுமதி பெறப்படவேண்டும். இச்சட்டமானது ஆண்களுக்கான திருமண வயது, இணக்கத்துக்கான தேவை பற்றி எதனையும் குறிப்பிடவில்லை. பெண்களின் விடயத்திற்கே முன்னுரிமை அளிக்கின்றது. இருப்பினும் பொதுச்சட்டத்தின்படி பதினெட்டு வயதைத் தாண்டியவர்களே திருமணம் முடிப்பதற்கான சட்ட அங்கீகாரம் உள்ளது.

திருமணத்தின் போதான பிரச்சினைகளுக்கு குடும்ப மட்டத்தில் கலந்துரையாடி சரிசெய்யப்படவேண்டும். அதுவும் கைகூடாத இறுதிநிலையாகவே விவாகரத்து இருக்கின்றது. தற்போதைய காலகட்டத்தில் இளம் யுவதிகள் கையடக்கத் தொலைபேசிகளை தவறாக பயன்படுத்துவதால் குடும்ப ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

குடும்ப வன்முறை தடுத்தல் சட்டத்தின் மூலம் தீர்வுகள் தெளிவாக இருந்துள்ள போதிலும் அதிகமானவர்கள் அச்சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க விரும்புவதில்லை. திருமண விடயத்திலும், விவாகரத்து விடயத்திலும். பராமரிப்பு விடயத்திலும் பொதுச் சட்டமும், முஸ்லிம் சட்டமும் எத்தகைய விடயப் பரப்புக்களைக் கொண்டுள்ளது என்பதை அனைவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்காக இளம் யுவதிகள் சட்டம் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என மேற்கண்டவாறு தெரிவித்தார். (05)

# தற்கொலைக்கு எதிரானதாக விழிப்புணர்வு சைக்கிளோட்டம்



தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு தொடர் சைக்கிளோட்டம், தற்கொலைகளைத் தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், திருகோணமலையை செவ்வாய்க்கிழமை வந்தடைந்தது.

இத் தொடர் சைக்கிளோட்ட வீரர்களை திருகோணமலை றோட்டரிக் கழக அங்கத்தவர்களால் வரவேற்கப்பட்டார்கள். தைரியம், இரக்கம், பொறுப் பேற்றல் என்ற பெயரையுடைய, தன்னார்வதொண்டர் நிறுவனம், ரோட்டரிக் கழக அனுசரணையுடன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை 11பேர் ஆக உள்ளது. தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும் தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகையை ஏற்படுத்துவதற்குமாகவே இவ் விழிப்புணர்வூட்டல் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. (சிசி1333) என்னும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, இலங்கையின் 12 மாவட் டங்களை உள்ளடக்கியதாக தொடர் துவிச்சக்கர வண்டியோட்ட நிகழ்வை நடத்தி வருகின்றது. இத் தொடர் சைக்கிளோட்டமானது திருகோணமலைக்கு வந்தடைந்தது அவர்களுக்கு மதிய உணவு ரோட்டரி இல்லத்தில் கொடுக்கப்பட்டது பின்னர் தற்கொலையின் தாக்கம் குறித்து மக்களை விழிப்பூட்டும் முகமாக நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்பட்டது. அத்துடன் தற்கொலை மனப்பாங்கை நீக்கக்கூடிய ஆலோசனைகள் 1333 என்ற தொலைபேசி இலக்கம் அடங்கிய கையேடுகளை பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.(05)








# சஜித்தின் பரப்புரைக் கூட்டத்தில் மதத்தலைவர்களுக்கு புறக்கணிப்பு







வவுனியாவில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரக் கூட்டத்தில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மத குருமார் புறக்கணிக் கப்பட்டுள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டனியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் செவ்வாய்க் கிழமை வவுனியா யங்ஸ்ரார் விளை யாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தின் பிரதான மேடையில் மதத்தலைவர்கள‌ளுக்கும் இடம் ஒதுக்கப்பட்டு அவர்களும் அமர்ந்திருந்தனர்.

குறித்த பொதுக் கூட்டத்தில் மூவினங்களையும் சேர்ந்த நான்கு மதங்களையும் சேர்ந்த மக்கள் கலந்து கொண்ட போதும் பௌத்த மதகுரு, இந்து மதகுரு, கிறிஸ்தவ மதகுரு ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவர்கள் எவரும் பிரதானமேடையில் காணப்படவில்லை. இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த 6 மௌலவிகள் வரவழைக்கப்பட்டு அவர்கள் மதத்தலைவர்கள் அமரும் இடத்தில் இருந்ததுடன், ஒரு மௌலவி உரையாற்றியும் இருந்தார்.

ஆனால் ஏனைய மதத் தலைவர் கள் அழைக்கப்படவில்லை என அங்கு கலந்து கொண்டு ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(05-100)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விசாரணையும் தண்டனையும் அவசியம்

கடவுச்சீட்டுக்களை புரட்டாதி 15 முதல் சீராக விநியோகிக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக ஆளும் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய வசதிகளுடன் அந்த கடவுச் சீட்–டுக்கள் அமைந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம்பல்லாயிரக்கணக்கானகடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுவரும் நிலையில், அதற்குரிய ஏற்பாடுகளை, வசதிகளை சரியாகச் செய்யாத அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மீது இதுவரையில்நடவடிக்கைஏதும்எடுக்கப்படவில்லை. அந்தத் தவறு மிகச் சாதாரணமாகக் கடந்து செல்லப்படுகின்றது. ஆளும்தரப்பு இந்த விடயத்தில் போதியஅக்கறைசெலுத்துவதாகத்தெரியவில்லை.

2023ஆம் ஆண்டும் மார்ச் மாதத்தில் இருந்து டிசெம்பர் வரை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மாதத்திற்கு 83 ஆயிரம் கடவுச்சீட்டுகளை விநியோகித்துள்ளது. 2024ஆம்ஆண்டு மாதத்துக்கு 60 ஆயிரம் வரை கடவுச்சீட்டு விநியோகித்திருக்கிறது. ஆளும்தரப்பு தற்போது விநியோகித்துவரும் சாதாரண கடவுச்சீட்டுக்கு பதிலாக இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த முயற்சித்தாலும் அதனை இதுவரை அறிமுகப்படுத்த முடியாமல் போயிருக்கிறது.

அதேநேரம் இலத்திரனியல் கடவுச்சீட்டு முறையை அறிமுகப்படுத்தி விநியோகிக்கும்வரை, சாதாரண கடவுச்சீட்டு விநியோகிக்கும் நடவடிக்கையை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டிருக்கவேண்டும். ஆனால் அதனை அவர்கள் செய்ய தவறி இருக்கின்றனர்.

நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் நிலையில் தற்போது 900 க்கும் குறைவாகவே விநியோகிக்கப்படுகிறது. அதனாலே கடவுச்சீட்டுக்காக பெரும் வரிசை ஏற்பட்டுள்ளது. அத்துடன் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் கடவுச்சீட்டு 30ஆயிரம் வரையே தற்போது கைவசம் இருக்கிறது. அதனால்தூரப்பிரதேசங்களில்இருந்து வரும் மக்களும் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகிக்க ஆளும்தரப்பு கேள்விகோரல் முறையைப் பின்பற்றவில்லை என்பது இது தொடர்பான குழப்பங்களுக்குஅடிப்படையாகஅமைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம் கடவுச்சீட்டு விநியோகிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கு, கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள தேவையான கொள்வனவு கட்டளையை குடிவரவு குடியகல்வு திணைக்களம் வழங்காமல் இருந்துள்ளது. இதனால் அரசுக்கு ஒரு மாதத்துக்கு ஏற்படக்கூடிய நட்டம் 1100 மில்லியன் ரூபாவாகும் என்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

இதற்கெல்லாம் யார் பொறுப்பு? தவறுகளுக்கான தண்டனை யாருக்குரியது? என்பதற்குஎந்தப்பதிலும் இல்லை. இந்தக் குளறுபடிகளால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு ஆளும்தரப்பில் இருந்து எந்த நடவடிக்கையும் இல்லை. அது தொடர்பில் விசாரணைகளோ,அதற்குப்பொறுப்பானவர்களுக்குத் தண்டனையோ வழங்கப்படுவதற்கான அறிகுறிகள் இல்லை. இது ஏற்றுக்கொள்ள முடியாதது. மக்களுக்குப் பாதிப்பையும் அரசுக்கு நட்டத்தையும் ஏற்படுத்திவர்கள் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவது அவசியம்.

# இந்தியப் பிரதமரின் உக்ரைன் பயணம் சாதகமா?



**வேணு ராஜாமணி**

பிரதமர் நரேந்திர மோடி கடந்த மாத இறுதியில் உக்ரைனுக்கு பயணம் மேற்கொண்டார். 1991-இல் சோவியத்ரஷியாவிடம்இருந்து உக்ரைன்விடுதலை பெற்ற பிறகு அங்கு சென்ற முதல் இந்திய பிரதமர் மோடிதான். ஆனால், இந்தப் பயணம் அதிக ஊடக வெளிச்சம் பெற்றதே தவிர அதிக அர்த்தமுள்ள பயணமாக அமையவில்லை.

‘இந்தியா நடுநிலை வகிக்கும் நாடு என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டும். இந்தியா ரஷியாவின் பக்கம் சாய்கிறது என்ற கருத்தை மாற்ற வேண்டும். இந்தியா அமைதியை நிலைநிறுத்த விரும்புகிறது. போரையும், உக்ரைன் மக்களின் துயரத்தையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்’ என இந்தியா ஆவல் கொண்டுள்ளது என்பதே பிரதமர் மோடியின் பயணத்தின் நோக்கம். ஆனால், இதில் எந்த நோக்கத்தையும் அப்பயணம் நிறைவு செய்யவில்லை என்பதே உண்மை.

பிரதமர் மோடியுடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி செய்தி யாளர்களைச் சந்தித்தர். அப்போது, இந்தியா விடம் எதிர்பர்க்கும் விஷயங்களை அவர் மிகவும் வெளிப்படையாக முன்வைத்தர். முக்கியமாக ரஷியாவிடம்இருந்துகச்சாஎண்ணெய்வாங்குவதை இந்தியா நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டர். கடந்த 6 வாரங்களுக்கு முன்பு பிரதமர் மோடிரஷியாவுக்குபயணம்மேற்கொண்டிருந்தபோது உக்ரைனில் குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷியா தாக்குதல் நடத்தியது. இதன் மூலம், இந்தியாவை ரஷியா அவமதித்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினர்.







உக்ரைன் மீது ரஷியா தொடுத்துள்ள போரை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்ற இந்திய நோக்கத்தை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தர். அதே வேளையில், நவம்பர் மாதம் நடைபெறும் உலக அமைதி மாநாட்டை இந்தியா நடத்தும் என்று எதிர்பர்க்கப்படுகிறது. ஆனால், ஸ்விட்சர்லாந்தில் ஜூன் மாதம் நடைபெற்ற அமைதி மாநாட்டின் கூட்டு அறிக்கையில் இந்தியா கையொப்பமிடாததால் அடுத்த அமைதி மாநாட்டை இந்தியா நடத்துவது சிரமம் என்று இந்தியாவை ஸெலென்ஸ்கி மறைமுகமாக விமர்சித்தர். (இந்த ஒப்பந்தம் ரஷியாவுக்கு எதிரானது என்பதால் இந்தியா அதில் கையொப்பமிடவில்லை).

அமைதிவேண்டும்என்றுவெற்று அறிக்கைகளை மட்டும்வெளியிடுவதுஉக்ரைனுக்குபோதுமானதல்ல. எங்கள்நாட்டின்இறையாண்மைமிக்கபிராந்தியங்கள் ரஷியாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையில் உக்ரைனுக்கும் ரஷியாவுக்கும் நடுநிலையாக இருப்பதைவிட, உக்ரைனின் பக்கம் இந்தியா இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம் என்று ஸெலென்ஸ்கி கேட்டுக் கொண்டர்.

கடந்த ஜூலை மாதம் பிரதமர் மோடி ரஷியாவுக்கு பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அதிபர் புதினை ஆரத்தழுவி நட்பு பாராட்டிய அதே நேரத்தில் உக்ரைன் மீது ரஷிய ராணுவம் ஏவுகணைகளை மழையாகப் பொழிந்து கொண்டுதான் இருந்தது.

இது தொடர்பான தனது அதிருப்தியை மோடியின் ரஷிய பயணத்தின்போதே ஸெலென்ஸ்கி வெளிப்படுத்தினர். ‘உக்ரைனின் மிகப்பெரிய குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷியா குண்டுவீசி தாக்குதலை நடத்தியுள்ளது. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்தச் சூழலில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர், மாஸ்கோவில் உலகின் மிக மோசமான கொடூர குற்றவாளியைக் கட்டியணைத்தது, அமைதி முயற்சிகளுக்கு மிகப்பெரிய ஏமாற்றம் தருவதாக அமைந்துள்ளது’ என்று அவர் கூறியிருந்தர். அப்போது அமெரிக்காவும் மோடியின் ரஷிய பயணம் குறித்த தனது அதிருப்தியை தெரிவித்திருந்தது. முக்கியமாக தில்லி தலைமையை தொடர்பு கொண்டு அமெரிக்கா பேசியதாக தகவல்கள் வெளியாகின. இதுவே பிரதமர் மோடி உக்ரைனுக்கும் பயணிக்க வேண்டிய நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

இதுதவிர, ‘சர்வதேச தலைவர்’ என்ற பிம்பத்தை தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டிய கட்டாயம் பிரதமருக்கு எழுந்தது. மேலும், இந்தியாவில் மக்களவைத் தேர்தலில் தனது செல்வாக்கு சரிந்துள்ளது வெளிப்பட்ட நிலையில், உக்ரைன் பயணத்தை தனக்கு சாதகமாக முடிக்க அவர் முற்பட்டிருக்கலாம்.

இந்தியாவிலேயே மோடியின் இந்தப்பயணத்தை பல்வேறு தரப்பினரும் விமர்சித்தனர். 2022-ஆம் ஆண்டு உக்ரைன் மீது ரஷியா பேர் தொடுத்ததில் இருந்து இந்தியா இந்த விவகாரத்தில் இருந்து விலகியே இருந்து வந்தது. ரஷியாவை குறைகூற

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான அரச உத்தியோகத்தரிடம் விசாரணை



(பாறுக் ஷிஹான்)

சுமார் 4 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதி மிக்க ஐஸ் போதைப் பொருள்களுடன் சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையின் விசேட தேர்ச்சி பெற்ற புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய நீண்ட நாள்களாக சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் விநியோகம் செய்து வந்த குறித்த சந்தேக நபரை சாய்ந்தமருது பிரதான வீதியில் வைத்து செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் சம்மாந்துறை பகுதியில் உள்ள கல்வி திணைக்களத்தில் பணிபுரிவதுடன் சூட்சுமமாக ஐஸ் போதைப்பொருளை சாய்ந்தமருது உட்பட கல்முனைக்கு நீண்ட காலமாக விநியோகித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயது மதிக்கத்தக்க குறித்த சந்தேக நபர் 25 கிராம் ஐஸ் போதைப்பொருளை பைகளில் உறையிடப்பட்டு மிக சூட்சுமமாக கடத்தி வரப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிளுடன் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு சந்தேக நபர் மற்றும் சான்றுப்பொருள்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இந்நடவடிக்கை விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி. குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார, அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# இந்தியப் பிரதமரின் உக்ரைன் பயணம் சாதகமா?

4ம் பக்க தொடர்ச்சி...........

முடியாது என்பதால் ஐ.நா.வில் ரஷியாவுக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியா வாக்கெடுப்பைப் புறக்கணித்தது. ரஷியா மீது மேற்கத்திய நாடுகள் விதித்த தடையையும் இந்தியா ஏற்கவில்லை.

தில்லியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டுக்கு உக்ரைனுக்கு இந்தியா அழைப்பு விடுக்கவில்லை. உக்ரைனை அழைத்தால் ரஷியா மாநாட்டை புறக்கணித்துவிடும் என்பதே இதற்கு காரணம். ரஷியா-உக்ரைன் போர் விஷயத்தில் இந்தியா பொதுவெளியில் தெரிவித்த கருத்துகள் தெளிவற்கவே இருந்து வந்தன. பிரச்னைகளை ராஜீய ரீதியில் தீர்க்க வேண்டும், பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும், பிரச்னைகளுக்கு போர் தீர்வல்ல என்பதுபோன்ற கருத்துகளையே இந்தியா தெரிவித்து வந்தது. எனினும், இது உக்ரைனுக்கு சற்று ஆறுதல் அளிப்பதாகவே இருந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பிய கண்டத்தில் நடைபெறும் மிகப்பெரிய போர் இதுதான். உக்ரைன் பிராந்தியத்தில் 30 சதவீதத்துக்கும் மேலான பகுதிகள் ரஷிய ஆக்கிரமிப்பில் உள்ளன. இந்தப் போர் இப்போதைக்கு முடிவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. தங்களுடைய பிராந்தியத்தை ரஷியா ஆக்கிரமித்திருக்கும் வரை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று மோடியின் பயணத்தின்போதே ஸெலென்ஸ்கி கூறிவிட்டார்.

ஐ.நா. பொதுச் சபையில் கடந்த 2022 பிப்ரவரி 23-ஆம் தேதி கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் உக்ரைன் பிராந்தியத்தில் இருந்து ரஷியா முழுமையாக வெளியேற வேண்டும் என்றும், உக்ரைன் மீதான போரை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் கூறப்பட்டது. இதற்கு 141 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. இந்த வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கவில்லை.

தீர்மானத்தை ஆதரித்த 141 நாடுகளில் 100 நாடுகள் ஸ்விட்சர்லாந்து அமைதி மாநாட்டில் பங்கேற்று கூட்டறிக்கையிலும் கையொப்பமிட்டன. நேட்டோ கூட்டமைப்பும் இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக உள்ளது.

இந்த சூழ்நிலையில் ரஷியாவுக்கு சென்று புதினை ஆரத்தழுவிய மோடி, அடுத்ததாக உக்ரைனுக்கும் சென்று ஸெலென்ஸ்கியையும் கேமராக்கள் முன்னால் ஆரத்தழுவியது போதுமான நடவடிக்கையல்ல. இந்தப் போரில் இந்தியாவின் நிலைப்பாடு முற்றிலுமாக மாற வேண்டும் என உக்ரைன் கருதுகிறது.

ஆனால், ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதை நிறுத்த வேண்டும் என்ற உக்ரைனின் கோரிக்கையை இந்தியாவால் நிச்சயமாக ஏற்க முடியாது. ஏனெனில், மிகவும் குறைந்த விலையில் இந்தியாவுக்கு கச்சா எண்ணெயை ரஷியா அளித்து வருகிறது. ரஷியாவை வெளிப்படையாக விமர்சிக்கவே இந்தியா தயாராக இல்லாத நிலையில் அந்நாட்டுடன் எண்ணெய் வர்த்தகம் நிறுத்தப்பட வாய்ப்பே இல்லை.

எனவே, பிரதமர் மோடியின் உக்ரைன் பயணம் எந்த அமைதி நடவடிக்கைக்கும் வித்திடாது. ரஷியா-உக்ரைன் போர் தொடர்ந்து இதே நிலையில் நீடிக்கும் அல்லது மோதல் போக்கு அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையில் இதில் இந்தியாவின் நிலைப்பாடும் பட்டும் படாமல் பேசுவதாகவே இருக்கும்.

மதில் மேல் பூனையாக இருப்பதும், போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளை (ரஷியா, உக்ரைன்) சமாளிப்பதும் இந்தியாவுக்கு நிச்சயமாக சவால்தான். போரின் தொடக்கத்திலேயே ரஷியா மீதான விமர்சனங்களை இந்தியா தெளிவாக எடுத்துரைத்திருக்க வேண்டும். முக்கியமாக, ஐ.நா. சபையில் இந்தியா தனது ஆட்சேபங்களைத் தெளிவாக தெரிவித்திருக்க வேண்டும். இது இந்தியா மீதான உக்ரைனின் நம்பகத்தன்மையை அதிகரித்திருக்கும்.

ஆனால், ரஷியா அதிருப்தியடைந்துவிடும் என்ற அச்சத்தில் இந்தியா எதையுமே செய்யாமல் இருந்துவிட்டது. இப்போது திடீரென அமைதித் தூதராக உக்ரைனுக்கு பிரதமர் சென்றால், ரஷியாவின் அதிருப்தியை சம்பாதிக்கும் நிலைக்குத்தான் தள்ளப்படுவோம். பிரதமரின் உக்ரைன் பயணத்தால் இந்தியா மீது ரஷியா அதிருப்தியடைந்துவிட்டதா என்பதை பொறுத்திருந்துதான் பர்க்க வேண்டும்.

நாம் இப்போது புதிய பனிப்போர் காலத்தில் வாழ்ந்து வருகிறோம். அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் நெருக்கடியால் ரஷியாவும், சீனாவும் அந்த நாடுகளை எதிர்கொள்ள தங்களுக்குள் நெருக்கம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், இந்தியா திடீரென உக்ரைன் பக்கம் சாய்ந்து அதனால் ரஷியா, சீன ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தால் அது மேலும் சிக்கலாக அமையும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஐ.தே.கவின் தேர்தல் காரியாலயம் அக்கரைப்பற்றில் திறந்து வைப்பு







(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் காரியாலயத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று அரசடிப் பகுதியில் இடம்பெற்றது.



பிரதேசஅமைப்பாளர்எம்.ஏ.எஸ்.சலீம்தலைமையில் இடம்பெற்றஇந்நிகழ்வின்போதுஐக்கியதேசியக்கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான பிரதம அமைப்பாளர் யூ.கே.ஆதம்வெள்வை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு காரியாலயத்லதத் திறந்து வைத்தார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கட்சிகள் மூலம் இதுவரை ஐந்து தேர்தல் காரியாலயங்கள் நிறுவப்பட்டுள்ளதாகஅக்கரைப்பற்று பொலிஸ் நிலைய தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக,அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் இரு தேர்தல் காரியாலயங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் காரியாலயங்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இரு காரியாலயங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் தேர்தல் காரியாலயமொன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)





# மரக்கல மீகாமன் நூல் வெளியீடு

(எப்.முபாரக்)

பர்ஹான் முஸ்தபா எழுதிய'மரக்கல மீகாமன்' றொபர்ட் நொக்ஸின் வரலாற்று புனைகதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மூதூர் பேர்ள் கிரேன்ட் மண்டபத்தில் நடுத்தீவு வலுவூட்டல் மற்றும் நலன்புரி சங்கத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலாநிதி றவூப் ஸெய்ன் மற்றும் நூல் திறனாய்வாளராக எழுத்தாளரும், ஆய்வாளருமான சிறாஜ் மஸ்ஹூரும் கலந்து சிறப்பித்ததோடு பெருந்திரளான வாசகர்ளும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வை அஷ்ஷேஹ் என்.சியாத் (நழீமி) தலைமை தாங்கியதோடு, வெளியீட்டு அமைப்பின் தலைவர் எஸ்.எம். முஜீப் அவர்களும் பங்கேற்று நேர முகாமைத்துவத்தின் அடிப்படையில் சிறந்த முறையில் வடிவமைத்து நெறிப்படுத்தி சிறப்பித்திருந்தார்.

சகோதரர் வி.எம்.ஹசீன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதோடு நூலின் முதல் பிரதியினை நூலாசிரியரின் தாயார் சபியா உம்மா மற்றும் பாரியார் ஹிதாயா பர்ஹான் வழங்கி வைக்க தொழிலதிபர் வைத்தியர் வை.ஜெஸ்மின் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நூல் மூதூர் ஜேஎம்ஜ வெளியீட்டகத்தால் பதிப்பு செய்யப்பட்டதோடு, துஆஜ உரிமையாளர் ஆஷா பாலினால் நூலாசிரியரின் சார்பில் எழுத்தாளரின் மகள் எப்.ஹரீனா செரீனுக்கு முதல் அரையாண்டுக்கான சிறந்த நாவலுக்கான விருதும் வழங்கி வைக்கப்பட்டது.(05)



## ரணில் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்கிறார். எனவேவீழ்ச்சியடைந்திருந்த இந்த நாட்டை கட்டியெழுப்பிய நபர் மீது நம்பிக்கை வைத்து, ஜனாதிபதி தேர்தலில் சரியான தீர்மானம் எடுக்கும் என நம்புகிறோம் என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசசமூகத்துடனான அனைத்து உறவுகளும் சர்வதேச நாணயநிதியத்தின் கூடைக்குள் வைக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ள அவர் இதன் அர்த்தம் என்னவென்றால் நாட்டின் முழு எதிர்கால திட்டமும் சர்வதேச நாணயநிதியத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதே என குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேரத்தில் சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையிலிருந்து யாராவது ஒருதலைப்பட்சமாக விலகநினைத்தால் அது நாட்டின் மக்களிற்கும் நாட்டிற்குமான கடப்பாட்டை கைவிடுதலாகும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சர்வதேச நாணயநிதியத்திலிருந்து விலகுவோம் என்ற எதிர்பார்ப்பு எங்களிற்கு இல்லை என நாங்கள் உங்களிற்கு உறுதியளிக்க விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கஜேந்திரகுமாருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் யாழ் மாவட்ட உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற அமர்வுகளில் 3 மாதங்களுக்கு பங்கேற்காதிருக்க அனுமதி கோரி யோசனை முன்வைத்தார்.

அதற்கு சபை அனுமதி வழங்கியது. உடல்நலக் குறைவுக்கு சிகிச்சை பெற்று வருவதன் காரணமாக அவருக்கு ஏற்கனவே 3 மாத கால விடுமுறையை நாடாளுமன்றம் வழங்கியிருந்தது. இரண்டாவது தடவையாக இப்போதும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## யாருக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார்.

இம்முறை தாம் பல்வேறு வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக உண்மைக்கு புறம்பான தகவல்கள் வெளிவந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் தாம் ஆதரவு வழங்கவில்லை எனவும் எதிர்காலத்திலும் அவ்வாறு செய்வதற்கு எதிர்ப்பார்ப்பு இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னொருபோதும் இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் தற்போது போன்ற நிலையற்ற தன்மையும் சவாலும் இருந்தது இல்லை என அவர் கூறியுள்ளார்.

இந்த பாரதூரமான நிலைமை தொடர்பாக அனைத்து வாக்காளர்களும் சிந்திக்க வேண்டியுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தனிநபர் தொடர்பில் அல்லாமல் ஒவ்வொரு வேட்பாளரும் முன்வைத்துள்ள திட்டங்கள், கொள்கைகள், அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களிடமுள்ள திட்டங்கள், நடைமுறைகள், அந்தத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இருப்பவர்களின் இயலுமை என்பன குறித்து வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முக்கியத்துவம் வழங்கவும் கல்வி. சுகாதாரம் , விவசாயம். கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள், சர்வதேச வர்த்தகம் ஆகிய விடயங்கள் தொடர்பாக முக்கியத்தும் வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேர்மை, நல்லாட்சி, ஊழல் ஒழிப்பு மற்றும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் உறுதிமொழி கோரும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளதெனவும் முன்னாள் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

ஆட்சி முறையின் நேர்மை மற்றும் பொறுப்புக் கூறலை கோரி 2 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமான பாரிய மக்கள் போராட்டம் மாற்றத்தை கோரியதை மறக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1948ஆம் ஆண்டில் இருந்து தமிழ் தலைவர்களையும், தமிழ் மக்களையும் சிங்கள அரசியல் தலைவர்கள் ஏமாற்றியதன் காரணமாகவே ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது. தமிழ் மக்களின் போராட்டத்திற்கான காரணம் சிங்களவர்களில் பெருமளவானோருக்குத் தெரியாது. நாங்கள் பூர்விகமாக வாழ்ந்த மக்களே. எங்களுக்கான உரிமைகளை மறுத்த காரணத்தினாலேயே நாங்கள் இந்த நாட்டில் ஒன்றாக வாழ முடியாது என்ற கோசங்கள் எழுந்தன.

ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த சிங்களத் தலைவர் செப்டெம்பர் 21 ஜனாதிபதியாவார். ஆனால் ஒருசில தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளர் என்ற ஒருவரை களமிறக்கியுள்ளனர். இந்த மனநிலை அவர்களிடையே ஏற்பட சிங்களத் தலைவர்களே காரணம். போர் முடிவடைந்து 15 வருடங்களின் பின்னரும் பொது வேட்பாளர் என்ற கோஷம் தமிழ் மக்களிடையே வந்துள்ளது என்றால் அதற்கான முழுப்பொறுப்பையும் பெரும்பான்மை சமூகத்தின் தலைவர்களே ஏற்கவேண்டும்.

பொறுப்புள்ள அரசியல் கட்சியாக 75 வருடங்களாக தமிழ் மக்களை வழிநடத்திய கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இது விடயத்தில் தீர்க்கமான முடிவொன்றை எடுத்துள்ளது. தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தமிழ் அரசுக் கட்சி ஏற்கவில்லை. நாங்கள் மீண்டும் ஒருமுறை நாட்டின் எதிர்காலத்திற்காக தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்காகப் பெரும்பான்மைச் சமூகத்திற்கு மற்றொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தத் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சிப்பார்களாக இருந்தால் அதன் பின்னர் தமிழ் மக்கள் எந்தப் பாதையில் செல்வார்கள் என்பதனை எங்களால் கூற முடியாது. ஆனால் பொறுப்புள்ள கட்சியாக வெற்றிபெறக்கூடிய பிரதான வேட்பாளருக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். பொதுவேட்பாளருக்குப் பின்னால் இருக்கும் ஒருசில அரசியல்வாதிகள் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளேன். ஆனால் இந்த பொதுவேட்பாளர் விடயத்தை ஆதரிக்கும் புலம்பெயர் தேசத்தில் உள்ள ஒரு சிலரையும், சிவில் மக்கள் பிரதிநிகளையும் விமர்சிப்பதில்லை.

ஒருசில அரசியல்வாதிகள் இன்னுமொரு வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய எடுத்த விடயத்தை தாங்கள் எடுத்த மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை மறைப்பதற்காகவும் சலுகைகள் பெற்றதை மறைப்பதற்கும் பயன்படுத்துகின்றனர். அவர்களில் ஒருசிலர் தமிழ் மக்களை குழப்பும் வகையில் செயற்படுகின்றனர். தமது தனிப்பட்ட நன்மைக்காகவே அவர்கள் பொது பொதுவேட்பாளரின் பின்னல் இருக்கின்றனர். திரைமறையில் அவர்கள் பிரதான வேட்பாளருடன் வேலை செய்துகொண்டிருக்கின்றனர்.

ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதான வேட்பாளரைச் சந்தித்து எவ்வாறு மறைமுகமாக உங்களுடன் வேலைசெய்வது என்று கலந்துரையாடியுள்ளனர். ஆனால் நாங்கள் தமிழ் அரசுக் கட்சி என்ற வகையில் அவ்வாறு மக்களுக்கு துரோகம் செய்யப் போவதில்லை. தமிழர்களின் விடுதலைப் போராட்டம் நடந்தபோது இராணுவத்துடன் இணைந்து விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்தவர்கள் மீண்டுமொருமுறை பொதுவேட்பாளருக்கு பின்னால் இருந்துகொண்டு எமது தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர். இதுவே உண்மை.

பொதுவேட்பாளரை எதிர்ப்பதனால் பல அச்சுறுத்தல்கள் எமக்கு விடுக்கப்படுகின்றன. தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் உங்கள் அரசியலை அழித்துவிடுவோம் என்றும் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகாமல் பார்த்துக்கொள்வோம் என்றும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. இந்த அச்சுறுத்தல்களுக்கு பயந்து தமிழ் மக்களுக்கு தேவையான விடயத்தை கூறாமல் இருக்கப் போவதில்லை.எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவார். பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய கடமை எமக்குள்ளது என்றார்.

## ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்;

மக்கள் நல்ல உத்வேகத்துடன் இருக்கின்றனர். சங்கு சின்னத்துக்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டனர். கடந்த எட்டு ஜனாதிபதிகளாலும் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம், பல துன்பங்களைச் சந்தித்திருக்கின்றோம்.

இந்த தேர்தல் என்பது நான் வெற்றிபெறுவதற்கான தல்ல. இனம் வெற்றிபெறவேண்டும் என்பதுவே எனது இலக்கு. இனத்தின் அடையாளமாகவே நான் நிறுத்தப்பட்டிருக்கின்றேன். எனது சின்னத்துக்கு வாக்களிக்கும் ஒவ்வொருவரும் உங்களுக்கு நீங்களே வாக்களிப்பதாகவே அர்த்தம்.

கடந்தகால இன்னல்களைத் தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இந்தத் தேர்தல் இருக்கும். இந்தத் தேர்தலின் முடிவுகள் சர்வதேசத்தின் மனசாட்சியை நிச்சயம் உறுத்தும். இந்தியாவிற்கும் ஒரு செய்தியினை சொல்லும். தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமையினை வழங்கவேண்டும் என்று அரசையும் வலியுறுத்தும்.

கடந்தகாலங்களில் பல போராட்டங்களைத் தமிழினம் கண்டுள்ளது. இது புள்ளடி போடும் ஒரு போராட்டம். அனைவரும் இந்த பணியினை உறுதியுடன் செய்யவேண்டும். எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மீனவர் பிரச்சினை விவசாயிகள் பிரச்சினை உள்ளடக்கப்பட்டிருந்தது. அது பிரதி எடுக்கப்படும்போது தற்செயலாகவே விடுபட்டுள்ளது.

அந்த விடயங்கள் இறுதிப் பிரசுரத்தில் நிச்சயம் உள்ளடக்கப்படும். மீனவர் பிரச்சினை என்பது பெரும் பிரச்சினை. இந்தியாவைப் பகைப்பதற்கும் வெறுப்பதற்கும் அப்பால் இந்தியாவை அணைத்துக்கொண்டு மீனவர்களின் உரிமைகளை பாதுகாக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அத்துடன் தேர்தலின் பின்னரும் நான் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன். அதில் மாற்றுக் கருத்தில்லை. கட்சியால் என்னிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பம் வரும் போது அதற்கான விளக்கத்தினை அவர்களுக்கு வழங்குவேன் - என்றார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தான் கட்சி அரசியலில் ஈடுபடமாட்டார் என்கிற உறுதிமொழியை அரியநேந்திரன் தமக்குத் தந்திருக்கிறார் என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் தலைமைக்குழு உறுப்பினரான சட்டத்தரணி யோதிலிங்கம் காணொலிப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார். தமிழ் பொது வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவர் அந்தப் பிரபலத்தைப் பயன்படுத்தி எந்த வகையிலும் பின்னர் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது முக்கிய நிபந்தனையாக விதிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்பவே அரியநேந்திரன் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார் என்று யோதிலிங்கம் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் அரியநேந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகவேண்டும் தமிழ் அரசுக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ளாத அவர் தொடர்ந்தும் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றார்.



காலைக்கதிர் Kalaikkathir





# ரணில்தான் இன்றும் என்றும் ஜனாதிபதி

## கல்முனையில் இணைப்பாளர் இராஜேஸ்வரன் இடித்துரைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் இன்றும் என்றும் ஜனாதிபதி. அதில் சந்தேகமில்லை. எனவே, தமிழ் மக்கள் பொன்னான வாக்குகளை வீணாக்காமல் வெற்றி பெறும் குதிரைக்கு வாக்களித்து பங்காளராகுங்கள்.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் முருகேசு இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து செவ்வாய்க்கிழமை நற்பிட்டிமுனையில் இடம்பெற்ற பிரசார முன்னோடி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் முழு நாடும் தோல்வியடையும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும். - என்றார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பணிமனை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவிருப்பதை ஒட்டி மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவரது இல்லத்தில் முன்னோடிக் கூட்டத்தை நடாத்தினார்.

அவர் மேலும் கூறுகையில் -

எமது மக்களின் அமோக ஆதரவுடன் அவர் ஜனாதிபதி ஆவார். எமது மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அதனை சீர் செய்ய வேண்டும்.

ரணில்விக்கிரமசிங்கஜனாதிபதியாகதெரிவானபிறகு வரிசை யுகத்துக்கு முடிவுகட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை வகுத்தார். இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகிறது. பொருள்களின் விலைகளும் குறைந்துள்ளன. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. எமது அரச தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

எனவே, ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கஇந்நாட்டை ஆளவேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்குஅவரின்தலைமைத்துவம்இருந்தால் இந்நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனிமனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின்தோல்வியாகும். அதுமட்டுமல்ல, மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

இது தேர்தல் காலம் என்பதால் சில ஜனாதிபதி வேட்பாளர்கள்அதைவழங்குவேன், இதைவழங்குவேன் என உறுதிமொழி வழங்கலாம். ஆனால் எதுவும் நடக்கப்போவதில்லை. நடைமுறைக்கு சாத்தியமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனவே, அவர் எமது மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார். - என்றார்.

எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் எனது பூரண ஆதரவினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வழங்குவதாக முடிவெடுத்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

மேலும் தெரிவிக்கையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்கள்அனைத்தும்பின்தங்கியே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும் அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும் எதிர்கால சிந்தனை(எதிர்வர இருக்கின்ற தேர்தல்கள்) அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவதை எதிர்பார்க்கின்றேன். - என்றார்.

(05)



# தபால் மூல வாக்களிப்பு வவுனியாவில் ஆரம்பம்



ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நேற்றையதினம் ஆரம்பமாகின.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் வாக்களிப்பு செயற்பாடுகள்சுமுகமாகஆரம்பமாகி நடைபெற்றுவருவதுடன் வவுனியா தலைமைபொலிஸ்நிலையத்தில் பொலிஸ்உத்தியோகத்தர்கள் தமது தபால்வாக்குகளைஅளித்திருந்தனர்.

இதேவேளை நேற்றையதினம் மாவட்டச்செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பாதுகாப்புதரப்பு ஆகியோர் தமது தபால் மூல வாக்குகளை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை வன்னி மாவட்டத்தில் 13,389 பேர் தபால் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)





# சட்டவிரோதமாக சிகரெட்டுக்களுடன் விமான நிலையத்தில் வர்த்தகர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுக்களை சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வந்த வர்த்தகர் ஒருவர் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

33 லட்சம் ரூபா பெறுமதியான 22,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 110 காட்டூன்களை கொண்ட சிகரெட்டுகளை பயணப் பையில் மறைத்து வைத்திருந்த போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, பல்லன்சேனையில் வசிக்கும் 47 வயதுடைய வர்த்தகராவார்.

சந்தேகநபர் அபுதாபியிலிருந்து விமானத்தில் புதன்கிழமை அதிகாலை 03.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டநபர்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், குறித்த நபரின் பயணப் பொதியில் மேலும் சட்டவிரோதமாக சிகரெட்டுகக்களை வைத்திருந்தமையால் மீண்டும் அவர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சிகரெட்டுக்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து வைத்திருத்தல் மற்றும் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எதிர்வரும் புதன்கிழமை 11ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் அவரை ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்களை பரப்பிய குற்றத்தில் கைதானவர் விளக்க மறியலில்

சமூகவலைத்தளங்களில்போலியானதகவல்களைபரப்பி, மக்களை தவறாக வழிநடத்த முற்பட்டார் எனும் குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள்வைத்தியஅத்தியட்சகர்தொலைபேசிமற்றும்முகநூல் என்பன திங்கட்கிழமை இரவுதிடீரெனசெயலிழந்திருந்ததுடன், வைத்தியசாலை விடுதிக்கு முன்னால் அவரது கார் தரித்து நின்றமையாலும் பல்வேறு விதமான சந்தேகங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக எழுப்பட்டிருந்தன.

வைத்தியரை காணவில்லை எனவும் சாவகச்சேரி பொலிஸாருக்கும் தகவல்கள் வழங்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்குடன் பொலிஸார் வைத்தியசாலைக்கு வந்திருந்தனர்.

அந்நிலையில் யூடியூபர் இருவர் உள்ளிட்ட மூவர் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து காணொளிகளை எடுத்ததுடன், சமூக வலைத்தளங்களில் நேரலையில், மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் விதமான கருத்துக்களை தெரிவித்ததுடன், தவறான தகவல்களையும் பரப்ப முற்பட்ட நிலையில் மூவரையும் பொலிஸார் கைதுசெய்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று இருந்தனர்.

அதேவேளை, விடுதிக்குள் வைத்தியர் இருந்த நிலையில் பொலிஸார், கதவை தட்டி வைத்தியரை வெளியே அழைத்த வேளை, வைத்தியர்பதில்எதுவும்கூறாததால், கதவைஉடைக்க முயற்சித்த வேளை, வெளியே வந்த வைத்தியர், எதற்காக விடுதிக்குள் வந்தீர்கள் என பொலிஸாருடன் தர்க்கப்பட்டு கொண்டார். அதனால் பொலிஸார் அவ்விடத்தில் இருந்து வெளியேறி இருந்தனர்.

அந்நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மூவரையும் விசாரணைகளின் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய வேளை யூடியூபர்ஸ் இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, மற்றைய நபரை விளக்கமறியலில்வைக்குமாறுஉத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர், கடந்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு சுகாதார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்த போது சாவகச்சேரி வைத்தியசாலை முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகருக்கு ஆதரவாக குழப்பத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சாவகச்சேரி நீதவான் நீதிமன்றினால்பிணையில்விடுக்கப்பட்டிருந்தநிலையிலையே, தற்போது மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேர்தல் விதிமுறைகளை மீறிய மூவர் புதுக்குடியிருப்பில் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப் பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி மக்களை ஓர் இடத்தில் ஒன்றுதிரட்டி காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதாகவும் , வேலை வாய்ப்புகள்பெற்றுக்கொடுப்பதாகவும் வாக்குறுதிகளை கூறி மக்களிடம் 200 ரூபா பெறப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியினரால் படிவம் பூரணப்படுத்தப்பட்டு வந்திருந்தது.

அதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற முல் லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தை சேர்ந்த உத்தியோ கத்தர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸார் அவர்களிடம் இருந்த படிவங்களைபறிமுதல்செய்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த இருவர்மற்றும்வீட்டுஉரிமையாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைபுதுக்குடி யிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.(05)

# பகிரங்கசேவை ஆணைக்குழு உறுப்பினர் ஒருவராகத் தெரிவாக விண்ணப்பிக்கலாம்

பகிரங்க சேவை ஆணைக்குழுவில் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விருப்புடையதனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 54 ஆம் உறுப்புரையில் குறித்துரைக் கப்பட்டுள்ளவாறாக, நாடாளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக, உள்ளூரதிகாரசபை உறுப்பினராக இருக்கும் எவரும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையோராக இருக்கமாட்டார்கள்.

மேலும் ஆணைக்குழுவின் ஓர் உறுப் பினராக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, அரச சேவையில் அரச உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோகத்தராக இருந்த எவரும் அவரின் நியமனத்திற்கு முன்பதாக, அவ்வாறான நியமனம் செயலுக்கம் பெறுகையில், அவ்வாறான பதவிகளில் இருந்து நீங்க வேண்டும் என்பதுடன் அரச உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோ கத்தராக மேலும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் 'பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்' என்ற துரித இணைப்பில் வழங்கப்பட் டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள், 2024 செப்ரெம்பர் 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில், 'அரசமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசமைப்புப் பேரவை – அலுவலகம், இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீஜயவர்தனபுர, கோட்டே' எனும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் அல்லது மின்னஞ்சலின்விடயமாக 'பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(05)

# அரச ஊழியர்கள் சம்பள உயர்வு வாக்குறுதி: வேட்பாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்படலாம்

## விஜயதாஸ ராஜபக்ச சுட்டிக்காட்டு



தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான கட்சிகளின் வேட்பாளர்களில் எவர் வென்றாலும் இரண்டு மூன்று மாதங்களில் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களிற்குப் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் சம்பள உயர்வு குறித்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். இது லஞ்சம் போன்றது எனத் தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக அவர்கள் தகுதிநீக்கம் செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் அரசாங்க ஊழியர்களிற்குசம்பளஉயர்வுகுறித்துவாக்குறுதிகளை வழங்கியுள்ளனர் என தெரிவித்துள்ள விஜயதாஸ ராஜபக்ஸ உணவுவழங்குவது தகுதிநீக்கம் செய்யப் படக்கூடிய குற்றம் என்றால் ,அரசாங்க ஊழியர்களிற்கு சம்பள உயர்வை வழங்குவதாக தெரிவிப்பது இலஞ்சம் வழங்குவதை போன்றது எனத் தெரிவித்துள்ளார்.

இது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் என முறைப்பாடு அளிக்கப்பட்டால், பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தகுதிநீக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களின் செலவுகள் குறித்த ஆதாரங்களை சேகரித்து வருகின்றோம்,தேர்தல் ஆணைக்குழுவுடன் இது குறித்து பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம் எனஅவர் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களின் சொத்துக்கள் குறித்த பிரகடனம் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும்,இதன் காரணமாக அவர்கள் கைதுசெய்யப்படலாம் என விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.(05)

# போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

## பதுளையில் சம்பவம்



போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர்ஒருவர்பதுளைபோதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் செவ் வாய்க் கிழமை கைது செய்யப்பட் டுள்ளார் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை வெளஸ்ஸ பகுதியைச் சேர்ந்த45வயதுடையநபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் கொழும்பில் இருந்து போதை மாத்திரைகளை கொண்டு வந்து பதுளை பகுதியில் விற்பனையில் ஈடுபடுவதாக பதுளை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேக நபரிடம் இருந்து 345 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்ல சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகர ஆகியோரின் ஆலோசனையின் பேரில் குற்ற புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி பிரபோ சானக்க தலைமையில் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, விசாரணையின் பின்னர் சந்தேக நபரை பதுளை நீதிவான் நீதிமன் றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# இலங்கையின் சிறுவர்களில் மூன்றில் ஒருவர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்

## நாடாளுமன்ற அறிக்கையில் தகவல்



இலங்கையின் சிறுவர்களில் மூன்றில் ஒருவர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் போசாக் கின்மை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்துள்ளது.

குழுவின் உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் ரோகிணி கவிரட்ண இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.(05)

# பொதுநலவாய கண்காணிப்பாளர்கள் செப்டெம்பர் 15இல் கொழும்பு வருகை



இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி ஃபோர் தலைமையிலான 13 பேர் அடங்கிய பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல்கண்காணிப்புப்பணிகளைமுன்னெடுப்பதற்காக வழமைபோன்று இம்முறையும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் ஆகியவற்றுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அழைப்புவிடுத்துள்ளது. அதற்கமைய ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் இரண்டு குழுக்கள் கடந்த இரு வாரங்களில் நாட்டை வந்தடைந்ததுடன், அவை நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்புப்பணிகளை ஆரம்பித்துள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழுவொன்றும் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் செயன்முறையைக் கண்காணிப்பதற்காக நாட்டுக்கு வருகைதரவுள்ளது. பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்ரீஸியா ஸ்கொட்லன்ட் சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி ஃபோர் தலைமையில் 13 உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை இத்தேர்தல் கண்காணிப்புப்பணிகளுக்காக நியமித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள செயலாளர் நாயகம் பற்ரீஸியா ஸ்கொட்லன்ட், 'தேர்தல் கண்காணிப்புப்பணி என்பது பொதுநலவாய அமைப்பின் மிகமுக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதனூடாக உறுப்புநாடுகளின் முக்கிய கட்டமைப்புக்கள் மற்றும் செயற்பாடுகளின் ஜனநாயகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

அதற்கமைய இலங்கையில் தேர்தலுக்கு முன்னரான சூழ்நிலை, வாக்களிப்பு செயன்முறை, வாக்கு எண்ணல் செயன்முறை, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னரான சூழ்நிலை என்பன உள்ளடங்கலாக தேர்தல் செயன்முறையின் நம்பகத்தன்மையில் தாக்கம் செலுத்தக்கூடிய சகல காரணிகளும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழுவினால் செயற்திறன் மிக்கவகையில் மதிப்பீடு செய்யப்படும். - எனத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய எதிவரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ள பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழு, இம்மாதம் 27 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து தேர்தலுக்கு முன்னர், தேர்தல் தினத்தன்று மற்றும் தேர்தலுக்குப் பின்னர் என முழுமையான கண்காணிப்புப்பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

இதன்போது கண்டறியப்படும் விடயங்களை உள்ளடக்கிய இடைக்கால அறிக்கையொன்று முதலில் வெளியிடப்படவிருப்பதுடன், அதனைத்தொடர்ந்து எதிர்காலத்தேர்தல்செயன்முறையைமேம்படுத்துவதற்கு உதவக்கூடியவாறான விரிவான அறிக்கையொன்று வெளியிடப்படும்.

அதன்படி சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி ஃபோர் தலைமையிலான இக்கண்காணிப்புக்குழுவில் அன்டிகுவா மற்றும் பர்புடா, பஹமாஸ், பிஜி, ஜமைக்கா, கென்யா, மாலைதீவு, நியூஸிலாந்து, நைஜீரியா, பாகிஸ்தான், சென் லூஸியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தேர்தல் ஆணைக்குழுக்களின் அதிகாரிகளாகப் பணியாற்றுகின்ற மற்றும் இராஜதந்திரப் பதவிகளை வகிக்கின்ற லான் ஹக்ஸ், அலிஸன் மேனார்ட் ஜிப்ஸன், ஜொஸபின் தமாய், ஷரோன் பக்வான்-ரோல்ஸ், ட்ரெஸ்-ஆன் க்ரெமர், மனோவா எஸிபிஸூ, சாரா நஸீம், மேரியன் ஸ்ரீட், அடெரெமி அஜிபெவா, மொஹமட் அமீர் வஸிம், சிந்தியா பாரோ, மண்ட்லா சுனு மற்றும் விக்டர் சாலே ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.(05)

# ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு உள்ளிட்ட வெளவேறு பிரதேசங்களில் ஐஸ் போதைப்பொருளுடன்பெண்உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 11 கிராம் 830 மில்லிகிராம் ஹெரோயின், 75950 ரூபா பணம், கையடக்கத்தொலைபேசி ஆகியவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை பொலிஸாருக்குகிடைத்ததகவலின்அடிப்படையில்இவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 32 வயதுடைய வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

இதேவேளை, பேலியகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெல்லிகஹவத்த பிரதேசத்தில் 11 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை பொலிஸாருக்குகிடைத்ததகவலின்அடிப்படையில்இவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 49 வயதான நெல்லிகஹவத்த பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

கல்கிஸ்சை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரத்மலானை ரயில்;நிலையபிரதேசத்திற்குஅருகில் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போது 10 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ்போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 43 வயதுடைய இரத்மலானை பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை , கிரான்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 09 கிராம் 330 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 32 வயதுடைய கொழும்பு14பிரதேசத்தைசேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# மாதகல் கடலில் படகு கவிழ்ந்து கோர விபத்து

## ஒருவரைக் காணவில்லை



மாதகலில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற இளைஞர்கள் பயணித்த படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்நிலையில் ஒருவர் பாதுகாப்பாக கரை சேர்ந்துள்ளதுடன் மற்றையவர் காணாமல் போயுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

நேற்று (புதன்கிழமை) அதிகாலை இரண்டு இளைஞர்கள் கடற்றொழிலுக்கு சென்றுள்ளனர். அவர்கள் பயணித்த படகு திடீரென விபத்துக்குள்ளானது. இந்நிலையில் படகில் பயணித்த ஒருவர் நீந்திக் கொண்டிருந்த வேளை அருகே வந்த படகின் உதவியுடன் காப்பாற்றப்பட்டுள்ளார். மற்றைய இளைஞர் காணாமல் போயுள்ளார்.

நாகராசா பகீரதன் என்ற 21வயது இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

அவரைதேடும்நடவடிக்கைகளில் கடற்படையினரும் மீனவர்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர். (05)

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்











எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தவகையில் வாக்காளர் அட்டைகள் தயாரிக்கும் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் நாடுபூராகவும் நேற்று ஆரம்பமாகின.

அந்தவகையில், கிளிநொச்சி மாவட்டத்திலும் தபால் ஊழியர்களால் வாக்காளர் அட்டைகளை வீடுவீடாக சென்று விநியோகிக்கப்படுகிறன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியாவில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பு


இலங்கையின்9ஆவதுஜனாதிபதித் தேர்தலிற்கான தபால் மூலமான வாக்களிப்புக்கள் நாடளாவிய ரீதியில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

இந்நிலையில், நுவரெலியா தலைமையக பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் வாக்களித்தனர்.

குறிப்பாகநுவரெலியாமாவட்டத்தில் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கானஅனைத்துஏற்பாடுகளும் உரியமுறையில்மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு தேவையான அறிவுறுத் தல்களும்வழிகாட்டல்களும்தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குவழங்கப்பட்டிருந்தது. அத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்படிருந்தமை குறிப்பிடத் தக்கது.(05)







# மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியான முறையில் தபால்மூல வாக்களிப்பு ஆரம்பம்





எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள 9 ஆவது ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று (புதன்கிழமை) மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் அமைதியான முறையில் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 13, 116 பேர் தபால்மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஜே.ஜே.முரளீதரன் தெரிவித்தார்.

இதன்படி, மட்டக்களப்புதலைமையகபொலிஸ் நிலையம்உட்படமாவட்டத்தில்இடங்களில்பொலிஸார் மற்றும்மாவட்டசெயலகஉத்தியோகத்தர்கள்,தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் வாக்களித்து வருகின்றனர்.

இன்றும் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2024இல் வெளியிடப்பெற்றது